# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 056/ந/2018

ஆணை எண். 65/2018

நாள் : 26/03/2018

திரு செ. மதிவாணன்,
நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
சென்னை – 600 054. – முறையீட்டு மனுதாரர்

திரு சி. ஜம்புலிங்கம்,
சென்னை – 600 015. – எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி ஆணையர் திரு செ. மதிவாணன் அவர்களின் 06.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2018 அன்று பெறப்பட்டு, 056/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி ஆணையர் திரு செ. மதிவாணன் என்பவர், அந்நகராட்சியில் 20.01.1983 முதல் 24.01.1984 வரை உதவியாளராகப் பணியாற்றி, 31.01.2004 அன்று ஓய்வு பெற்ற திரு C. ஜம்புலிங்கம் என்பவருக்கு, அக்கால கட்டத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகையை வழங்குவதற்கு ஆணையிடப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் 12.01.2018 நாளிட்ட ஆணை எண்.10/2018–ஐத் தொடர்ந்து கீழ்க்காணும் விளக்கத்தினை தெரிவித்து அதற்கான ஆணையையும் வழங்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

> “ திரு C.ஜம்புலிங்கம் என்பவர் இந்நகராட்சியில் பணிபுரிந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. மேலும், ஆவடி பெருநகராட்சி அலுவலகம் புதிய கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 10 வருடத்திற்கும் மேலாகி விட்டது. ஆகவே 30 வருடத்திற்குரிய சேமநலநிதிப் பதிவேடுகளை தேடுவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் 30 நாட்கள் கால அவகாசம் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
>
> மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றம் ஆணையிடும் பட்சத்தில் அன்னாருக்கு பொது நிதியிலிருந்து சேமநலநிதி வட்டித் தொகை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ”

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவுகளின் கீழ், பொதுப்பணியாளர் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது நிர்வாக சீர்கேட்டினை மேற்கொண்டுள்ளது என இம்முறைமன்ற நடுவம் கண்டறியும் நிலையில், அது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட ஆணையரகங்களுக்கு பரிந்துரைப்பது மட்டுமே இவ்வமைப்பின் பணியாகும். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றிய பின்பு ஒய்வு பெற்ற பணியாளருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையினை வழங்குவதற்கு நகராட்சிப் பொது நிதியினைப் பயன்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முறையீடு செய்து கொள்ள வேண்டுமேயல்லாமல், இம்முறை மன்ற நடுவம் அன்று அடிப்படை நிர்வாக நடைமுறையை அறியாமல் ஆவடி நகராட்சி ஆணையர் மேற்குறிப்பிட்ட கருத்துருவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியது வியப்பளிக்கிறது. எனவே, தேவையற்ற நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துருக்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு ஆவடி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு செ. மதிவாணன்,
நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
சென்னை – 600 054.

2. மண்டல நகராட்சி நிர்வாக ஆணையர்,
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்